ஆனந்த் இன்ஸ்டிடியூட் ஆ∴ப் ஹையர் டெக்னாலஜி

சென்னை - 603 103.

அறிவு அற்றம்
காக்கும் கருவி

கல்வி வள்ளல்
T. கலசலிங்கம்

அன்னமிட்ட கை

K.K. ஆனந்தம் அம்மாள்

செல்வத்துப் பயனே ஈதல்

கல்வி வள்ளல் T. கலசலிங்கம் பற்றிய சிறு குறிப்பு - வெளியீடு

நாள்:
20.09.2014
[90வது பிறந்த தினம்]

இடம்:
கல்லூரி வளாகம்

ஊக்கம்
பேராசிரியர் T.A. **இராகவேந்திரன்,** M.E., Ph.D.,
முதல்வர், AIHT

ஆக்கம்
முனைவர் **மா. சுப்புராஜ்,** M.E., Ph.D.,
இணைப் பேராசிரியர்,
இயந்திரவியல் துறை, AIHT

நன்னிலத்தில் விளைந்த பயிர்

ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் அரணாக விளங்கும் கல்வியை, அறிவை தாராளமாக வழங்கும் கல்வி வள்ளல் அவர்கள், தென் தமிழகத்தில் உள்ள விருதுநகர் மாவட்டம், ஆண்டாள் அம்மை அவதரித்து அருளும் திருவில்லிப்புத்தூர் வட்டம் அருகில், தென்றலும் குளிர் நீரும் தவழும் இராமசந்திரபுரம் என்னும் குக்கிராமத்தில் 20.09.1924ல் அவதரித்தார். பொருளாதாரத்தில் மிகவும் ஏழ்மையான ஒரு கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் பெருந்தகையாரின் ஜனனம் அமைந்தது. தந்தை பெயர் மதிப்பிற்குரிய திருவேங்கடம், தாயார் பெயர் திருமதி குருவம்மாள்.

'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற தமிழ் முதுமொழிக்கு ஏற்ப கொடையின் மூலம் கல்விக்கான கலங்கரை விளக்கத்தை உருவாக்கிய கல்வி வள்ளல் அவர்கள், தன் ஆரம்பக் கல்வியை தினமும் 4 கி.மீ தூரம் நடந்து சென்றே கற்றார். இளமைப் பருவத்தில் அதிக நுணுக்கமும், கணித அறிவும் பெற்றவராய் விளங்கினார். இத்தகைய ஆய்ந்து அறியும் நுண்ணறிவு பிற்காலத்தில் அவரை மாபெரும் சமூக பொறுப்புள்ள தொழிலதிபராக உருவாக்கியது. வறுமையின் சூழலிலும் இடைவிடாமல் எட்டாம் வகுப்பு வரையில் கல்வி கற்றார்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு

இளம் பருவத்தில் பொருள் தேவையை பூர்த்தி செய்ய சொந்த கிராமத்திலுள்ள துணிக்கடையில் பணியாற்றினார். சுய உந்துதல் மற்றும் புதுமையைத் தேடும் இயற்கையான குணங்களால் வளர்ச்சி மற்றும் திரவியம் தேடி இந்த **'பாண்டிய தேச கிராமத்து நன்முத்து'** சென்னைப் பட்டணம் நோக்கி பயணத்தை தொடங்கியது.

ஆரம்பக் காலத்தில் சென்னை மாம்பலம் பகுதியில் காய்கறி வியாபாரத்தில் ஈடுபட்டார். தற்போதைய தி.நகர் பாண்டி பஜாரில் துணி வியாபாரத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். திருவொற்றியூரில் நடைபாதை வியாபாரியாக, இந்த வெற்றி மனிதரின் பயணம் தொடர்ந்தது.

அரசுப் பணிகள்

1942ம் ஆண்டு இந்தித் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். அரசாங்க வேலைப்பளுவுக்கு இடையிலும் இரவு பகலாக படித்து மெட்ரிகுலேசன் தேர்வு எழுதி, நல்ல மதிப்பெண்களோடு வெற்றி பெற்றார். பின்பு B.Com பட்டம்; அதன்பின் அகில இந்திய அஞ்சல் பணித் தேர்வில் வெற்றி அடைந்து சென்னை தலைமை அஞ்சலகத்தில் பணியில் சேர்ந்தார். 1952ல் தமிழ்நாடு அரசு தேர்வாணையத் தேர்வில் வெற்றி பெற்று வருவாய்த் துறையில் ரெவன்யு இன்ஸ்பெக்டராக அருப்புக்கோட்டையில் பணியாற்றினார். இந்திய இரயில்வே சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி, தேர்ச்சிப் பெற்று, கிழக்கு இரயில்வேயில் கணக்கராக கல்கத்தாவில் பணியாற்றினார்.

தியாக விளக்கு

இந்திய தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சுதந்திர வேட்கை தாங்கிய ஏடுகளை வெளியிடுவதற்காக கிராமம் கிராமம் அச்சு இயந்திரத்தை தூக்கிச் சென்றார். கதர் இயக்கத்தில் இணைந்த இந்த காந்தியவதி, 1948ல் சென்னையில் கதர்த்துணிகள் விற்பனை மையத்தை நடத்தினார்.

கட்டிடத் தொழில் ஈடுபாடு

வாழ்வில் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் அது கல்வி வள்ளலுக்கு வெற்றியாகவே அமைந்தது. தன் கட்டிடக் கலைத் தொழிலை சென்னை தம்புச் செட்டித் தெருவில் தொடங்கினார். பழைய வீடு ஒன்றை வாங்கி, ஒரு பொறியியல் வல்லுனரின் நேர்த்தி போன்று மாற்றம் செய்து விற்பனை செய்தார். புதிய பாதையில் அடி எடுத்து வைத்தார்.

ஆனந்த் பில்டர்ஸ் நிறுவனத்தை தொடங்கினார். மக்களால் போற்றும்படியான சிறப்பு மிகுந்த பல அடுக்கு மாடிக் குடியிருப்புகளை உருவாக்கினார். 1970ல் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இரண்டு பெரிய சாயப் பவுடர் தொழிற்சாலை, ஆந்திராவில் ஒரு சிறிய சிமெண்ட் தொழிற்சாலையையும் நிறுவினார்.

ஒளியேற்றிய கல்விப் பணி

ஏழைக்கோர் எழுத்தறிவித்தலே சிறப்பு என்பதை உணர்ந்து, தான் பிறந்த தென்தமிழக கிராமங்கள் மேம்பாடுஅடைய வேண்டும் என்பதற்காக, திருவில்லிப்புத்தூர் அடுத்துள்ள கிருஷ்ணன் கோவிலில் கல்விக் கோயிலுக்கான அடிக்கல் 1980ல் நாட்டப்பட்டது. அங்கு, ITI, பாலிடெக்னிக், பொறியியல், பார்மஸி கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி போன்ற ஏராளமான கல்வி நிலையங்களை நிறுவினார்.

மகாபாரதத்தில் பாண்டவர்கள் 'காண்டவப் பிரஸ்தத்தை' எவ்வாறு 'இந்திரபிரஸ்தமாக' மாற்றினார்களோ, அதைப் போன்று மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் கல்லும் முள்ளுமாக காட்சியளித்த தேசத்தை சொர்க்க பூமியாக மாற்றி, அதில் கல்விக் கோயிலை எழுப்பினார். இப்பூவுலகில் சந்திரனும் சூரியனும் உள்ளவரை, கல்வி வள்ளல் உருவாக்கிய கலசலிங்கம் பல்கலைக்கழகம் இவர் புகழைத் தாங்கி நின்று ஒளிவீசும். சென்னையில், 2000ல் "ஆனந்த் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹையர் டெக்னாலஜி', கல்வி வள்ளல் அவர்களால் உருவாக்கப்பட்டது.

பொதுத் தொண்டு

கல்விப் பணி மேம்பாட்டிற்காக கலசலிங்கம் மற்றும் ஆனந்தம் அம்மாள் கல்வி அறக்கட்டளையை நிறுவினார். அதன் மூலமாக பெரும்பாலான தென் மாவட்ட ஏழை மாணவ-மாணவியர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக கல்வி உதவித் தொகை பெற்று வருகிறார்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனத்தில்

உறுப்பினர், AICTE அமைப்பின் சென்னை மண்டல உறுப்பினர் என்று தன் வாழ்நாளில் பெரும் பகுதியை தன்னலம் கருதாது சமூக நோக்கில் செலவு செய்துள்ளார்.

மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரிடம் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ.10 ஆயிரம் நன்கொடை வழங்கினார். மத்திய திட்டக்குழு உறுப்பினராக இருந்த திரு.**K.**வெங்கட சுப்பிரமணியன் அவர்களின் வழிகாட்டுதலின்படி 1980ஆம் ஆண்டு, தன் பிறந்த ஊரில் உள்ள கலைமகள் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தினார். கல்வி வள்ளல் அவர்களின் சீரிய முயற்சியினால் தற்போது விருதுநகர் மாவட்டத்தில் ஒரு சிறந்த மேல்நிலைப் பள்ளியாக கலைமகள் பள்ளி விளங்கி வருகிறது.

தான் பிறந்த ஊரின் கல்வி, சமூக, பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக கல்வி வள்ளல் ஆற்றியுள்ள பணிகள் இன்றும் பலரால் போற்றப்பட்டு வருகிறது. பல்வேறு அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், ஆன்மிகவாதிகள் மற்றும் நீதியரசர்களோடு தான் கொண்ட நட்பை பொதுநலனுக்காகப் பயன்படுத்தியவர் கல்வி வள்ளல் அவர்கள். முன்னாள் குடியரசுத் தலைவர்கள் திரு. R.வெங்கட்ராமன், திரு.சங்கர் தயாள் சர்மா, திரு. **APJ** அப்துல்கலாம் ஆகியோருடன் அவர் கொண்ட தொடர்பு இன்றும் சிறப்பாகப் பேசப்படுகின்றது. முன்னாள் பிரதமர்கள் திரு.இராஜீவ்காந்தி, திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் போன்றோருடன் நல்லுறவைப் பேணினார்.

கலை, இலக்கியம், ஆன்மீகம், சமூகம் என்று அனைத்து துறைகளிலும் ஆர்வமும், ரசனையும் கொண்ட கல்வி வள்ளல் அவர்கள், பேசுவதற்கும், பழகுவதற்கும் இனிமையானவர். இளைஞர்கள் யாரைப் பார்த்தாலும் உற்சாகம் தரும் வார்த்தைகளைப் பேசிய வள்ளல் அவர்கள் வாழ்நாளின் இறுதிவரையில் கடுமையாக உழைத்து மகிழ்ச்சி கண்டவர். புதியனவற்றை ஆர்வமாக கற்றுக் கொள்வதற்காக புற மற்றும் அகக்கண்களை திறந்து வைத்திருந்த மேன்மையாளர் கல்வி வள்ளல் அவர்கள்.

கல்வி வள்ளலின் வெற்றிக்குத் துணையாக இருந்தவர் அவரது துணைவியார் திருமதி K.K. ஆனந்தம் அம்மாள் அவர்கள். பசிப்பிணி போக்கிய அவரின் ஈதல் பண்பு போற்றுதலுக்குரியது.

'பிறருக்கு பொருளும் ஞானமும் கொடுப்பதன் மூலம் சமூகம் மேம்பாடு அடையும், அதுவே தான் கொண்ட செல்வத்தின் பயன்' என்றுணர்ந்த கல்வி வள்ளல் 13.07.2014 அன்று இப்பூவுலகை விட்டு நீங்கினார். ஆனாலும் இன்றும் புகழுடன் வாழ்ந்து வருகிறார்.